# இயேசுவைப் போல் புதிய தலைவர்களைப் பயிற்றுவித்தல்:

## ஒரு தகப்பன் தன் பிள்ளைகளோடு உறவாடுவது போல புதுத்தலைவர்களைப் பயிற்றுவித்துப் பெருக்குதல்

சிறுவர்களுக்கு போதிப்பவர்கள் பாடம் T3b யை வாசிக்கவும்.

1. **புதிய தலைவர்களைப் பயிற்றுவிக்க ஜெபத்தோடும் வார்த்தையோடும் ஆயத்தமாதல்.**

**ஜெபம்:** "பரலோகத் தந்தையே, உமது குமாரனாகிய இயேசு புதிய தலைவர்களைப் பயிற்றுவித்து அதை எவ்வாறு செய்வது என்று எங்களுக்கும் காட்டினார். அவரது அப்போஸ்தலராகிய பவுலும் அது எவ்வாறு என்று எங்களுக்குக் காட்டினார். புதிய சபைகளுக்கும் குழுக்களுக்கும் சேவைசெய்ய புதிய தலைவர்களைப் பயிற்றுவிக்க எங்களுக்கு வலிமையும் திறமையும் தந்தருள்வீராக."



திரளான மக்களுக்கு இயேசு போதித்தபோது என்ன நடந்தது என்பதை **மாற்கு 6:1-6** ல் காண்க.

- இயேசுவின் வார்த்தைகளை மக்கள் எவ்வாறு கேட்டனர்? *(அவர்கள் ஆச்சரியத்தோடு கேட்டனர். வசனம் 2)*
- இயேசுவின் பிரசங்கத்தைக் கேட்ட வேறு சிலர் எவ்வாறு உணர்ந்தனர்?

  *(இடறல் (3), அவிசுவாசம் (6))*

சிறு குழுக்களில் வைத்து இயேசு எவ்வாறு புதிய தலைவர்களைப் பயிற்றுவித்தார் என்பதை **மாற்கு6:7-13**ல் காண்க:

- பயிற்சி குழுக்கள் எவ்வளவு பெரியவை? (மொத்தம் 12, இரண்டு பேர் அடங்கிய சிறு குழுக்கள், வச.7)
- இயேசு பயிற்சி பெறுவர்களை எவ்வாறு பயிற்றுவித்தார்? *(தங்கள் பணிகளை ஆற்ற அதிகாரத்தை அளித்தார், வச.7, தங்கள் பணிகளை எவ்வாறு செய்ய வேண்டும் என்று அறிவுரைகள் கூறினார், வச.8)*
- இயேசுவிடம் பயிற்சி பெற்றவர்கள் எவ்வளவு சீக்கிரமாகத் தங்கள் பணிகளை ஆற்றத் தொடங்கினர்? *(உடனடியாக, வச.12)*
- இயேசுவிடம் பயிற்சி பெற்றவர்கள் தங்கள் முதல் பயணத்தில் செய்த பணிகள் எவை? *(சுவிசேஷம் அறிவித்தல், பிணியாளிகளை குணப்படுத்துதல்).*
- இயேசு தம்மிடம் பயிற்சி பெற்றவர்களுக்கு பண உதவி அளித்தாரா? *(இல்லை. எதையும் எடுத்துச் செல்ல வேண்டாம் என்று கூறினார், 8).*
- தாங்கள் கற்றுக் கொண்டதை இயேசுவிடம் பயிற்சி பெற்றவர்கள் எங்கு பயன்படுத்தினர்? *(கிராமங்களிலும், வீடுகளிலும்).*

இயேசுவிடம் பயிற்சி பெற்றவர்கள் அவரிடத்தில் திரும்பி வந்தபோது நடந்தது என்ன என்பதை **மாற்கு 6:30–32** ல் காண்க:

- இயேசுவிடம் அவரிடம் பயற்சி பெற்றவர்கள் அறிவித்தது என்ன? *(தாங்கள் செய்த போதித்த எல்லாவற்றையும்)*
- இயேசுவிடம் கூறியபின் அவர்கள் எங்கு சென்றனர்? *(ஓய்வு எடுப்பதற்காக ஒரு தனியான இடத்திற்கு)*

### இயேசுவின் பயிற்சி முறையில் இருந்து பெறும் ஐந்து கொள்கைகள்

- பெரிய கூட்டங்களில் பேசுவது மட்டும் போதாது. தங்கள் மந்தை என்ன செய்து கொண்டு இருக்கிறது என்பதைப் பயிற்சி பெறும் ஒவ்வொருவரும் அறிவிப்பதை கேட்கும் அளவிற்கு சிறிய முவாகவும் வைத்து நீங்கள் பயிற்சி அளிக்க வேண்டும்.
- தாங்கள் கற்றுக் கொண்டதை உடனடியாக நடைமுறைப்படுத்தும் மக்களை பயிற்றுவிக்க வேண்டும்.
- பயிற்சி பெறுபவர்களுக்கு அதிகாரத்தை அளித்து எவ்வாறு எங்கு பணியாற்ற வேண்டும் என்பதைப் பற்றி அறிவுரை கூற வேண்டும்.
- அவர்கள் சில பணிகளை ஆற்றியபின் அவர்கள் செய்ததை சொன்னதைப் பற்றி அறிவிப்பதை கேட்க வேண்டும்.
- ஓய்வு எடுத்து மேலும் கற்க ஏதுவாக அவ்வப்போது ஓய்வுச் சுற்றுலாக்களையும் (retreats) ஏற்பாடு செய்ய வேண்டும்.

யார் யாரைப் பயிற்றுவிக்க வேண்டும் என்பதை **2 தீமோ. 2:1–2** ல் காண்க.

- பவுலுக்கும் தீமோத்தேயுவுக்கும் இடையில் இருந்த உறவு பற்றி விவரிக்கவும்.
- (அது தனது மகனை பயிற்றுவிக்கும் தந்தையைப் போன்றது).
- பவுல் யாரை பயிற்றுவித்தார்?
- (தீமோத்தேயுவையும், சீலா, தீத்து உட்பட பலரையும்).
- தீமோத்தேயு பயிற்றுவிக்க வேண்டியவர்கள் யார் (உண்மையுள்ள ஊழியர்கள்)
- உண்மையுள்ள ஊழியர்கள் யாரை பயிற்றுவிக்க வேண்டும்? (மற்றவர்களையும்)
- பயிற்சி 'சங்கிலியில்' எத்தனை 'இணைப்புகள்' உள்ளன? (நான்கு: பவுல், தீமோத்தேயு, உண்மை உள்ளவர்கள், மற்றவர்கள்).

புதிய தலைவர்களைப் பவுல் எவ்வாறு பயிற்றுவித்தார் என்பதை **கொலோசெயர் 1:1–9** மற்றும் **4:15–18** ல் காண்க:

- பவுலிடம் பயிற்சி பெற்ற முக்கியமான மனிதன் யார்? (தீமோத்தேயு, வச.1 )
- பவுலும், தீமோத்தேயும் உடன் ஊழியராக யாரை பயிற்றுவித்தனர்? (எப்பாப்பிரா, வச. 7)
- கொலோசெயில் விசுவாசிகளுக்கு பயிற்சி அளித்தவர் யார்?
- (எப்பாப்பிரா, வச. 7 கொலோசெயர்களின் வளர்ச்சி மற்றும் தேவைகளைப் பற்றி அவன் பவுலிடமும், தீமோத்தேயுவிடம் அறிவித்தான்).
- பவுலும் தீமோத்தேயும் கடிதங்கள் எழுதியதோடு வேறு எவ்வகையில் கொலோசெயர்களுக்கு சேவை செய்தனர்? (அவர்கள் அவர்களுக்காக ஜெபித்தனர்).

### பவுலின் பயிற்சி முறையில் இருந்து ஆறு கொள்கைகள்

- பயிற்சியாளர்களுக்கும் புதிய தலைவர்களுக்கும் இடையில் ஒரு தந்தை–மகன் உறவு நிலவ வேண்டும். உங்கள் கலாச்சாரத்தில் இத்தகைய உறவை எப்படி அழைப்பீர்கள்?

- தங்கள் சபையிலும், புதிய சபையிலும் அதிக அனுபவம் வாய்ந்த தலைவர்களே புதிய தலைவர்களை பயிற்றுவிக்க வேண்டும்.
- பயிற்சி எடுத்துக் கொண்டு இருப்பவர்களும் புதிய தலைவர்களுக்கு உடனடியாக பயற்சி அளிக்க ஆரம்பிக்கலாம்.
- பயிற்சி பெறுபவர்களின் முக்கிய தகுதி உண்மை உள்ளவர்களாக இருப்பதே: அதாவது, தங்கள் பயிற்சியை நடைமுறைப்படுத்துவது.
- பயிற்சியாளர்கள் பயிற்சி பெறுபவர்களின் சபையைப் பற்றி அறிந்து அவர்களுக்காக ஜெபிக்க வேண்டும்.
- பயிற்சியாளர்கள், சபைகள் மற்றும் அதன் தலைவர்களின் தேவைகளை சந்திக்க பயிற்சி பாடங்களை எழுதவும்.

**2. வரும் வாரத்துக் காரியங்களைக் குறித்து உடன் ஊழியர்களுடன் ஆலோசிக்கவும்.**

உங்களிடம் பயிற்சி பெறுபவர்கள் புதிய தலைவர்களைப் பயிற்றுவிக்க **ஏற்பாடு** செய்து இந்த பாடத்தின் நகல்களை அளிக்கவும்.

குடும்பத் தலைவர்களை **சந்தித்து**, அவர்கள் தங்கள் குடும்பத்தை ஜெபத்தோடும் ஆராதனையோடும் மேய்க்க பயிற்சி தரவும்.

சுவிசேஷம் எங்கு பரவுகிறது என்பது குறித்து **விவாதித்து,** வீட்டு குழுக்களை வழிநடத்துபவர்களை இனம் காணவும்.

நீங்கள் பயிற்றுவிக்கும் குழுக்களின் தேவைகளைக் **கேட்டறிந்து,** அவர்களுக்கு உதவியாக சிறு பாடங்களைக் கண்டறியவும் அல்லது எழுதவும்.

பாடங்களை சீக்கிரமாக கண்டறிந்து பிற ஊழியர்களுடன் பகிர்ந்து கொள்ளவும்.

**3. வரும் ஆராதனை வேளைக்காக உடன் ஊழியர்களுடன் ஆலோசிக்கவும்:**

இயேசு புதிய தலைவர்களை எவ்வாறு பயிற்றுவித்தார் என்பதை விளக்குக (மேலே உள்ள வேத வசனங்களையும் கேள்விகளையும் பயன்படுத்துக).

பவுலும் தீமோத்தேயும் எவ்வாறு புதிய தலைவர்களைப் பயிற்றுவித்தனர் என்பதை விளக்கி, நாம் எவ்வாறு செய்யலாம் என்பதைப் பற்றி கலந்தாலோசிக்கவும்.

**சிறுவர்கள்** தாங்கள் தயாரித்தவற்றை வழங்கட்டும்.

புதிய தலைவர்களைப் பயிற்றுவிக்கும் ஊழியர்கள் முன்னேற்றங்களையும் தேவைகளையும் குறித்து **அறிக்கை** வழங்கட்டும்.

எண்ணாகமம் 9:1-2 ஐ வாசித்து விவரித்து **கர்த்தரின் பந்தியை** அறிமுகப்படுத்துக:

- தேவன் தமது மக்களை அடிமைத்தனத்தில் இருந்து விடுவித்த ஓராண்டுக்குப் பின், புதிய மேய்ப்பர்கள் மக்களை பஸ்காவை ஆசரிக்கும்படி வழிநடத்தினர். இந்நாளில் எவ்வாறு ஒரு ஆட்டுக்குட்டியின் இரத்தம் தங்களுடைய முதற்பேறானவைகளைக் காத்தது என்பதை நினைவு கூர்ந்தனர்.
- இந்தப் பண்டிகைக்கு இயேசு புதிய அர்த்தத்தை அளித்தார். அவரே நமது பஸ்காவின் ஆட்டுக்குட்டி.

ஜெபிக்கவும், மேய்ப்பர்களை பயிற்றுவிப்பது மற்றும் பட்டிணங்களை சுவிசேஷப்படுத்துவது குறித்தத் திட்டங்களை உறுதிப்படுத்தவும் இரண்டு அல்லது மூன்று பேர் அடங்கிய குழுக்களை அமைக்கவும்.

ஒரு ஆசிரியர் விதியை **மனப்பாடம்** செய்க: "நான் கிறிஸ்துவைப் பின்பற்றுவது போல நீங்கள் என்னைப் பின்பற்றுகிறவர்களாய் இருங்கள்." (1 கொரி 11:1).